**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No. 66 of 2021

Deposition of P.W. 1

Name of the Witness: திரு.மாது

Date :14.11.2024

***1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை***

நான் எஸ்.எஸ்.எல்.சி படித்துள்ளேன். நான் கிரையம் செய்து கொடுக்க சொல்லி வழக்கு போட்டுள்ளேன். வைரம், தனபால், ராஜீ மீது போட்டுள்ளேன். தாவா சொத்தை நான் பார்த்திருக்கிறேன். தாவா சொத்து வைரத்திற்கு சொந்தமானது. வைரம் சொந்தமாக வாங்கினார். யாரிடம், எப்போது வாங்கினார் என்று எனக்கு தெரியாது. வைரம், தனபால் கணவன் மனைவி என்றால் சரிதான். வைரம் தனபாலின் கூட்டு குடும்பத்தில் அவரது மாமனார், இரண்டு பெண் குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. மொத்தம் 5 பேர் கூட்டு குடும்பத்தில் இருக்கிறார்கள். தாவா சொத்து வாளடுப்பு கிராமம். சர்வே எண் 22/2சி. புதிய சர்வே எண் 22/2சி2. சர்வே எண் 22/1பி. புதிய சர்வே எண் 22/1பி1. சர்வே எண் 22/2பி. தாவா சொத்தின் ஒரு சொத்திற்கு 90 சென்ட். இன்னொரு சொத்தின் அளவு 2 ஏக்கர் 75 சென்ட். இன்னொரில் கிணறுள்ளது. எந்தெந்த சர்வே எண்ணில் என்ன அளவு என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது. மூன்று சொத்துக்களும் அடுத்தத்தாக உள்ளது. வைரத்தின் அப்பா மூலமாகவும் புரோக்கர் மூலமாகவும் சொத்தை விற்பது பற்றி தெரிய வந்தது. சொத்தை விற்பது சம்பந்தமாக கிரய ஒப்பந்தம் போடுவதற்கு இரண்டு நாட்கள் முன்பாக தெரிய வந்தது. கிரைய ஒப்பந்தம் போடுவதற்கு முன்பாக

நான் வழக்கு சொத்தை பார்த்தேன். வைரத்தின் அப்பா பெயர் சின்னசாமி, புரோக்கர்களின் பெயர் அண்ணாமலை, கௌதமன், மனோகரன். இவர்களை பற்றி என்னுடைய தாவாவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

*(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)*